RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 8 | ஜனவரி.13 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## கனிமவள கடத்தல் விவகாரம்: அண்ணாமலை, அன்புமணி தமிழக அரசுக்கு கண்டனம்

சென்னை, ஜன.13-

கனிம வளக் கடத்தலுக்கு திமுக அமைச்சர்கள் உடந்தையாக இருப்பதாக பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை, பாமக தலைவர் அன்புமணி ஆகியோர் குற்றம் சாட்டியுள்ளனர். இதுதொடர்பாக அண்ணாமலை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தென்காசி மாவட்டத்தில் இருந்து கேரளாவுக்குத் தங்கு தடையின்றி நடைபெறும் சட்டவிரோதக் கனிமவளக் கடத்தலைக் கட்டுப்படுத்த ஆளும் திமுக அரசு தவறிவிட்டது. இந்தக் கனிமவளக் கடத்தல் தொடர்பாகப் பலமுறை முதல்வர் மு.க.ஸ்டாலின் கவனத்துக்குக் கொண்டு சென்றும், இந்த விவகாரத்தில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்தக் கடத்தலுக்கு முன்னாள் மற்றும் தற்போதைய அமைச்சர்களே ஆதரவாக இருக்



கின்றனர். இதன்படி தினமும் ஆயிரக்கணக்கான லாரிகளில் தமிழகத்தில் இருந்து கனிமங்கள் கடத்தப்படுகின்றன. இதனால் இயற்கை வளங்கள் அழிவதுடன், அப்பகுதி மக்களும் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறு அவர் கூறியுள்ளார். பாமக தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தென்காசி மாவட்டம் கடையம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெறும் கனிமவளக் கொள்ளையை தடுக்க முடியவில்லை. இந்த விவகாரத்தில் திமுக நெல்லை மேற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் கடையம் சந்திரசேகர் ராஜினாமா செய்துள்ளார். அவர் எடுத்துள்ள முடிவு சரியானது. தென் மாவட்டங்களில் பல்லாயிரம் கோடி அளவுக்கு கனிம கொள்ளை நடைபெறுகிறது. இதில் திமுகவுக்குப் பங்கு இருப்பதாக நான் தொடர்ந்து புகார் தெரிவித்து வருகிறேன். அவை உண்மை என்று தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. இனியாவது கனிமக் கொள்ளையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அன்புமணி தெரிவித்துள்ளார்.

# சென்னையில் இரட்டைத் தள மின்சார பேருந்து சேவை தொடக்கம்

சென்னை, ஜன.13-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் - 2026" விழாவில், பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அமெரிக்க வாழ் தமிழர்கள் சார்பில் வழங்கப்பட்ட இரட்டைத் தள மின்சார (Double-Decker EV Bus) பேருந்து சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அமெரிக்க வாழ் தமிழர்கள் (NRI) மற்றும் அசோக் லேலண்ட் லிமிடெட் நிறுவனம் இணைந்து, ரூ.1.89 கோடி மதிப்பீட்டில் ஒரு இரட்டைத் தள மின்சார (EV) பேருந்தை ஹிந்துஜா அறக்கட்டளை, மும்பை மூலமாக தமிழ்நாடு அரசிற்கு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்திற்கு (TTDC) பாரம்பரிய கலாச்சார சுற்றுலாவை இயக்குவதற்காக வழங்கப்பட்ட இப்பேருந்தின் சேவையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் கொடியசைத்து தொடங்கி வைத்து, பேருந்தில் செய்யப்பட்டுள்ள வசதிகளை பார்வையிட்டார்.

இப்பேருந்து மூலம் இயக்கப்படும் சுற்றுலா சேவைகள், சென்னை நகரின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் கட்டடக்கலை முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், மாணவர்கள், குறிப்பாக பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில், சுற்றுச்சூழலுக்கு உகந்த, தகவல் சார்ந்த மற்றும் அனுபவமிக்க சுற்றுலா அனுபவத்தை வழங்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட உள்ளது.

முதற்கட்டமாக சென்னையில், முன்மொழியப்பட்ட சுற்றுலா வழித்தடத்தின் படி, TTDC தலைமையகம் - LIC - ஸ்பென்சர் பிளாசா - மக்கா மஸ்ஜித் - பி. ஓர் - சன்ஸ் (வாட்ச் டவர்) - பல்லவன் சாலை - பாடிகார்டு முனீஸ்வரர் கோவில் - ராஜா அண்ணாமலை மன்றம் - சென்னை உயர்நீதிமன்றம் - தலைமைச் செயலகம் - ரிசர்வ் வங்கி - சென்னை துறைமுகம் - வெற்றி போர் நினைவுச்சின்னம் - நேப்பியர் பாலம்;

பேறிஞர் அண்ணா அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னாள் முதலமைச்சர்கள் எம்.ஜி.ஆர். அவர்கள் செல்வி ஜெயலலிதா அவர்கள் ஆகியோரது நினைவிடங்கள் - மெரினா கடற்கரை - கலங்கரை விளக்கம் - பட்டினப்பாக்கம் கடற்கரை - சாந்தோம் தேவாலயம் - அகில இந்திய வானொலி - கலங்கரை விளக்கம் காவல்துறை தலைமை அலுவலகம் - குயின் மேரீஸ் கல்லூரி - விவேகானந்தர் இல்லம் - பிரெசிடென்சி கல்லூரி - எழிலகம் - சென்னை பல்கலைக்கழகம் - தூர்தர்ஷன் கேந்திரா - இராஜாஜி மண்டபம் - ஓமந்தூரார் அரசு மருத்துவமனை - TTDC தலைமையகம் ஆகிய வழித்தடங்களில், நகரின் முக்கிய சுற்றுலா மற்றும் பாரம்பரிய இடங்களை முழுமையாகக் காணும் வகையில் பனோரமிக் (Panoramic) பார்வை வசதியுடன் இப்பேருந்தின் சேவை இயக்கப்பட உள்ளது.



## தைப்பொங்கல், உதயநிதி, கேஆர். பெரியகருப்பன் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாபெரும் கபாடிப் போட்டி

### எஸ். எஸ். ஏ. வல்லபாய் ஏற்பாடு

திருக்கோஷ்டியூர் ஜன13

சிவகங்கை மாவட்டம் திருக்கோஷ்டியூர் ஊராட்சிக் கழக திமுக சார்பில் முப்பெரும் நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக மாபெரும் ஒரு ஊர் மின்னொளிக் கபாடிப் போட்டியானது திருக்கோஷ்டியூர் எஸ்.. எஸ். தென்னரசு திடலில் நடைபெற்றது...

ஒன்றுபட்ட முகவை ஜில்லாவில் கழகம் வளர்த்த திமுக தளகர்த்தருள் ஒருவரான, கழக அமைப்பு மேனாள் செயலாளர், சேதுநாட்டு செல்லக்கிளி என அன்போடு தானைத்தலைவர் கலைஞர் அவர்களால் அன்போடு அழைக்கப்பட்ட, சிறுகதை மன்னன் எஸ். எஸ். தென்னரசு அவர்களின் உடன்பிறந்த சகோதரர் மாவட்ட திமுக விவசாய அணித் தலைவர் எஸ். எஸ். அருணாச்சலம் அருந்தவப் புதல்வன் , தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அவர்களால் வல்லபாய் எனும் நல்லபாய் என அன்போடு அழைக்கப்படும்

சிவகங்கை திமுக சுற்றுசூழல் அணி மாவட்ட அமைப்பாளர் திருக்கோட்டியூர் எஸ். எஸ்.ஏ. வல்லபாய் ஏற்பாட்டில் நிகழ்ச்சியானது நடைபெற்றது...

இந்த நிகழ்ச்சியை சிவகங்கை மாவடடக்கழக செயலாளர், தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தலைமையேற்று தொடங்கி வைத்தார்...

நிகழ்ச்சியில் முன்னிலையாக, திருப்புத்தூர் தெற்கு ஒன்றியக்கழக செயலாளர், ஒன்றிய முன்னாள் சேர்மன் சணமுகவடிவேல் , மாவட்ட திமுக விவசாய அணித்தலைவர் எஸ். எஸ். அருணாச்சலம், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் மு.சுப.சண்முகநாதன் அம்பலம் , மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ். ஏ. வல்லபாய் ஆகியோரும் முன்னிலை வகித்தனர்...

நிகழ்ச்சிக்கான பரிசுகளை ஒன்றிய செயலாளர் சண்முகவடிவேல் , எஸ்எஸ்ஏ வல்லபாய் , மேனாள் கவுன்சிலர் ராமேஷ்வரி கருணா , விவசாய அணி மு. மாணிக்கம் , சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர் திருமலை குமணன் ஆகியோர் பரிசுப்பொருட்களை வழங்கிச் சிறப்பித்தனர்...

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மாணவரணி வழக்கறிஞர் முகமது கனி , ஒன்றிய இளைஞரணி மேனாள் கவுன்சிலர் சகாதேவன் , சிவகங்கை திமுக மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் இராஜேஷ்வரி அண்ணாதுரை , அருண்ராஜா , தேவன் , முத்துராமன் , சரசு சந்திரன் , மாவட்ட பிரதிநிதி ஏடின்ஆர். தங்கமணி , மணி , திருக்கோட்டியூர் செயலாளர் சக்கரவர்த்தி என்ற கார்த்தி , சுரேஷ் , அழகுராஜா ,சாருபாலா , பார்த்தசாரதி ,நாகராணி , முத்துராஜா ,கார்த்திக், கிளைக்கழக செயலாளர்களான தானிபட்டி இளையராஜா , தரியம்பட்டி சின்னக்காளை, தி. வயிரவன்பட்டி காசி விஷ்வநாதன் ,வடக்குத் தெரு செல்வராஜ் , சுள்ளங்குடி ஆதிமுத்து , சோலுடையான்பட்டி மு. பாண்டி , சாமந்தன்பட்டி தவசு உள்ளிட்டோரும் , சார்பு அணி நிர்வாகிகளான பிரேம் , குமார் , வசந்த் என்ற வசந்தகுமார் , முத்துச்செல்வம் , பிரவீன்ராஜ் , முத்துக்குமார் ,கண்ணன், பிரபாகரன் உள்ளிட்ட திமுகவினர் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிவகங்கை திமுக மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ். ஏ. வல்லபாய் சிறப்பாகச் செய்திருந்தனர்...

## ஆம்னி பேருந்து கட்டணங்களை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, ஜன.13-

பொதுமக்கள் எளிதாக சொந்த ஊர் சென்று திரும்புவதற்கு வசதியாக ஆம்னி பேருந்துகளின் கட்டணங்களைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ''பொங்கல் திருநாளைக் கொண்டாடுவதற்காக லட்சக் கணக்கான மக்கள் சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு செல்லத் திட்டமிட்டிருக்கும் நிலையில், இதைப் பயன்படுத்திக் கொண்டு தனியார் ஆம்னி பேருந்து நிறுவனங்கள் விண்ணை முட்டும் அளவுக்கு கட்டணத்தை உயர்த்தியுள்ளன. அரசின் விதிகளை மீறி அப்பட்டமாக கட்டணக் கொள்ளை நடைபெறும் நிலையில், அதைத் தடுக்க திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காதது கண்டிக்கத்தக்கது. சென்னையில்



இருந்து நாளை 13ம் தேதியும், நாளை மறுநாள் 14ம் தேதியும் மதுரை செல்வதற்கு ரூ.4,000 வரையிலும், நெல்லை செல்ல ரூ.4,500 வரையிலும், கோவைக்கு ரூ.3,800 வரையிலும் கட்டணமாக வசூலிக்கப்படும் என்று ஆம்னி பேருந்துகள் அறிவித்துள்ளன. இந்தக் கட்டணம் விவரங்கள் ஆன்லைன் முன்பதிவு இணைய தளங்களில் வெளியிடப்பட்டு முன்பதிவுகள் செய்யப்பட்டு வருகின்றன. அனைத்து ஊடகங்களிலும் இந்தக் கட்டணக் கொள்ளை தொடர்பாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனாலும் ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையை தடுக்காமல் திமுக அரசு வேடிக்கைப் பார்த்து வருகிறது. ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் பல முறை ஆணையிட்டிருக்கிறது. ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையை பாமக ஒவ்வொரு முறையும் அம்பலப்படுத்தி வருகிறது. அப்போதெல்லாம் ஆம்னி பேருந்துகளின் உரிமையாளர்களிடம் பேச்சு நடத்தி ரூ.100 அல்லது ரூ.200 கட்டணக் குறைப்பு செய்ய வைப்பது, அதையும் மீறி கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் பேருந்துகளுக்கு ரூ.2,000 அபராதம் விதிப்பது போன்ற ஏமாற்று வேலைகளை மட்டுமே திமுக அரசு செய்து வருகிறது.ஒரு மக்கள் நல அரசின் கடமை மக்களின் பக்கம் நிற்பது தான். திமுக அரசு மக்களின் பக்கம் நிற்கிறது என்றால், சட்டவிரோதமாக கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் ஆம்னி பேருந்து நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அவற்றின் கட்டணங்களைக் குறைக்கச் செய்திருக்க வேண்டும். ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் ஒருமுறை கூட திமுக அரசு அவ்வாறு செய்யவில்லை. மாறாக கட்டணக் கொள்ளையில் ஈடுபடும் ஆம்னி பேருந்து நிறுவனங்களின் பக்கம் நின்று அவை மக்களை சுரண்டுவதற்கு துணை போவதையே திமுக அரசு வாடிக்கையாக வைத்திருக்கிறது. தமிழ்நாட்டை ஆளும் திமுக அரசு மக்களுக்கு சேவை செய்வதை விடுத்து, தனியார் முதலாளிகளுக்கு ஏவல் செய்வதையே கடமையாக வைத்திருக்கிறது என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகிறது. ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையை திமுக அரசு தடுக்கத் தவறியதன் மூலம் மீண்டும் ஒருமுறை அந்தக் குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. திமுக ஆட்சியாளர்களுக்கு மனசாட்சி இருந்தால் பொதுமக்கள் எளிதாக சொந்த ஊர் சென்று திரும்புவதற்கு வசதியாக ஆம்னி பேருந்துகளின் கட்டணங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று வலியுறுத்தியுள்ளார்.

## கடலூர் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு: சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, ஜன.13-

கடலூர் உள்ளிட்ட 7 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், வடகிழக்கு இலங்கை கடலோரப் பகுதிகளில் முல்லைத்தீவுக்கு அருகில் நேற்று முன்தினம் மாலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக கரையைக் கடந்தது.

இது படிப்படியாக வலு குறைந்து, தென் கடலோர தமிழகம் மற்றும் அதையொட்டிய மன்னார்



வளைகுடா பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சியாக நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்று சில இடங்களிலும், நாளை தென் தமிழகத்தில் சில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், வரும் 14ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், 15 முதல் 17ம் தேதி வரை தமிழகத்தில் பெரும்பாலான இடங்களிலும் வறண்ட வானிலையும் நிலவக்கூடும்.

தமிழகத்தில் இன்று கடலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதியிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக் கடல் பகுதிகளில் இன்று மணிக்கு 35 முதல் 45 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ. வேகத்திலும் சூறாவளிக்காற்று வீசக்கூடும். எனவே, இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணியில் 9 செ.மீ., திருப்பூண்டியில் 6 செ.மீ., வேதாரண்யம், திருநெல்வேலி மாவட்டம் ஊத்தில் 5 செ.மீ., நாலுமுக்கு, காக்காச்சி, தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி, புதுக்கோட்டை மாவட்டம் நாகுடி, நாகப்பட்டினம் மாவட்டம் கோடியக்கரை,

தலைஞாயிறு ஆகிய இடங்களில் 4 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அதிமுக சார்பில் சமத்துவ பொங்கல் விழா எம்எல்ஏக்கள் அசோக் குமார், தமிழ்செல்வம் பங்கேற்பு

கிருஷ்ணகிரி, ஜன.13-

கிருஷ்ணகிரி புதிய பஸ் ஸ்டாண்ட் அருகில், அ.தி.மு.க., மாநில மகளிர் அணி துணை செயலாளர் பரிதா நவாப் ஏற்பாட்டில், சமத்துவ பொங்கல் விழா நடந்தது. கிழக்கு மாவட்ட செயலாளர் அசோக்குமார் எம்.எல்.ஏ., தலைமை வகித்தார். மாவட்ட அவைத் தலைவர் காத்தவராயன், ஊத்தங்கரை எம்.எல்.ஏ., தமிழ்செல்வம், முன்னாள் எம்.எல்.ஏ., மனோரஞ்சிதம் நாகராஜ், நகர செயலாளர் கேசவன், எம்.ஜி.ஆர்., மன்ற மாவட்ட செயலாளர் தென்னரசு, அம்மா பேரவை மாவட்ட தலைவர் தங்கமுத்து, அம்மா பேரவை மாவட்ட செயலாளர் மாதையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சமத்துவ பொங்கல் விழாவில், மாணவியரின் பரத நாட்டிய நிகழ்ச்சி நடந்தது. இதில் பங்கேற்ற அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து, புதுப்பானையில் பொங்கல் வைத்து அனைவருக்கும் வழங்கினர். பின்னர், 500 பெண்களுக்கு எம்.எல்.ஏ., அசோக்குமார் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில், ஒன்றிய செயலாளர்கள் கண்ணியப்பன், சூர்யா, ரவிச்சந்திரன், திருமால், பர்கூர் கோவிந்தராஜ், அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாவட்ட செயலாளர் ஆஜி, கட்சியினர் நவாப், சுஹல், மகளிர் அணி சுகந்தி மாது, மாவட்ட விவசாய அணி மோகன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு ஜெயக்குமார், சிறுபான்மை நலப்பிரிவு மாவட்ட செயலாளர் மக்பூல், மாவட்டக் கழக துணைச் செயலாளர் சுமதி ராஜேந்திரன், வர்த்தகபிரிவு மாவட்ட செயலாளர் தூயமணி,மாவட்ட மாணவர் அணி ராகுல்,முன்னாள் பஞ்., தலைவர் பெருமாள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தேனி அருகே வீரபாண்டியில் பிறந்த குழந்தையை சாலையின் ஓரத்தில் வீசி சென்ற மர்ம நபர்கள்

தேனி, ஜன.13-

தேனி அருகே வீரபாண்டியில் இன்று அதிகாலையில் பிறந்த குழந்தை ஒன்றை மர்ம நபர்கள் சாலையின் ஓரத்தில் வீசி சென்றுள்ளனர். அந்த வழியில் நடைபயிற்சி சென்ற நபர்கள் சாலையின் ஓரத்தில் குழந்தை இருந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்து வீரபாண்டி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், கிராம நிர்வாக அலுவலர், சுகாதார அலுவலர்கள் ஆகியோர் பரிசோதித்த போது குழந்தை உயிரிழந்த நிலையில் இருந்துள்ளது

தொப்புள் கொடியை கூட அகற்றாமல் குழந்தை வீசி சென்று இருப்பதால் குழந்தை பிறந்து சில மணி நேரங்கள் மட்டுமே ஆகியிருக்கும் என கூறப்படுகிறது மேலும் சாலையில் வீசி



செல்லப்பட்ட குழந்தை ஆண் குழந்தை என்றும் தெரிவிக்கப்பட்டது

இதனை அடுத்து ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு குழந்தை மீட்டு தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்

தொடர்ந்து இந்த சம்பவம் குறித்து வீரபாண்டி போலீசார் காலை நேரத்தில் நடைபயிற்சி சென்ற நபர்களிடமிருந்தும், அந்த பகுதியில் உள்ள சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்தும் வருகின்றனர்

பிறந்த சில மணி நேரங்களே ஆன குழந்தையை எதற்காக தூக்கி வீசி சென்றார்கள், குழந்தையை பெற்றெடுத்த தாயின் நிலையின் என்பது குறித்து போலீசார் விசாரணையை தொடங்கியுள்ளனர்

வீரபாண்டி பகுதியில் அதிகாலையில் பிறந்த குழந்தை தூக்கி வீசி சென்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது.



## காவேரிப்பட்டினம் திமுக நகர கழகம், மேற்கு ஒன்றியம் சார்பில் திராவிட பொங்கல்,சமூக நீதிக்கான திருவிழா கபடி போட்டி

காவேரிப்பட்டினம், ஜன.13-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் ,திராவிடப் பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, காவேரிப்பட்டிணம் திமுக நகர கழகம்,மேற்கு ஒன்றியம் சார்பில் மேற்கு ஒன்றிய செயலாளர் சரவணன், நகர செயலாளர் ஜே கே எஸ் சாஜித் தலைமையில் மாபெரும் கபடி போட்டி பன்னிஅள்ளி புதூர் விளையாட்டு மைதானத்தில் சமத்துவம் பொங்கட்டும்! தமிழ்நாடுவெல்லட்டும்!

கபடி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர். இந்த போட்டியை நேற்று முன் தினம் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் எம்எல்ஏ அவர்கள் துவக்கி வைத்தார்.இந்தப் போட்டியில் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த 25 க்கும் மேற்பட்ட பல்வேறு கபடி அணிகள் உற்சாகமாக கலந்து கொண்டு தங்களின் திறமையை வெளிப்படுத்தினர். இளைஞர்கள், பொதுமக்கள் பெருமளவில் திரண்டிருந்து போட்டிகளை கண்டு ரசித்தனர். விளையாட்டின் மூலம் ஒற்றுமை, சமத்துவம் மற்றும் உடல் ஆரோக்கியம் ஆகியவற்றை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதாக திமுக நிர்வாகிகள் தெரிவித்தனர். போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் திமுக பிரமுகர் சங்கர் தர்மன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சபரி, மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் செல்வம், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் சின்ன பையன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பாரி,மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் மோகன் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் குமார் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கட்சி தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பொறியியல், மருத்துவம் மற்றும் ஒலிம்பியாட் துறைகளில் கோயம்புத்தூரின் சிறந்த மாணவர்களுக்கான அலன் கரியர் இன்ஸ்டிட்யூட் சோபன் 2025 பாராட்டு விழாவை நடைபெற்றது

கோவை, ஜன.12-

கோவை நவ இந்தியா பகுதி ஹிந்துஸ்தான் கல்லூரி கூட்டரங்கில் ஆலன் கரியர் இன்ஸ்டியூட் பிரைவேட் லிமிடெட் தனது வருடாந்திர ஆண்டு விழாவான சோபன் 2025 நிகழ்ச்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து.பொறியியல் மற்றும் மருத்துவ நுழைவுத் தேர்வுகளில் சிறப்பாக சாதித்து முன்னணி தேசிய கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற கோயம்புத்தூரின் சிறந்த மாணவர்களை கௌரவிக்கும் விழா நடைபெற்றது.




இதில் விருந்தினர்களாக, சக்தி கல்வி நிறுவனங்களின் துணைத்தலைவர் ஈ.ஆர். தீபன் தங்கவேலு, பிருந்தாவன் வித்யாலயாவின் தாளாளர் மற்றும் முதல்வர் வனிதா திருமூர்த்தி, கோவை வித்யாஷ்ரமத்தின் தாளாளர் மற்றும் கல்வி இயக்குநர் டாக்டர் எஸ்.பி. தேன்மொழி ஆகியோர் கலந்து கொண்டனர். முறைமை கல்வித் துறையை பிரதிநிதித்துவப்படுத்தி, ஏ.வி.ஜி. பள்ளியின் முதல்வர் சிவக்கொழுந்து, தி என்.ஜி.பி. பள்ளியின் முதல்வர் பிரீதா, தி என்.ஜி.பி. பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் நடராஜ், பிருந்தாவன் பப்ளிக் பள்ளியின் துணை முதல்வர் முத்துக்குமாரி, மவுண்ட் லிட்டெரா ஜீ பள்ளியின் முதல்வர் வெங்கட் மற்றும் அத்வைத் தாட் அகாடமி ஒருங்கிணைப்பாளர் கவிதா ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்தனர்.

இந்த ஆண்டு நடைபெற்ற விழாவில் பொறியியல், மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் மாணவர்கள் பெற்ற அபூர்வமான சாதனைகளை பதிவு செய்தது. இதில் 16 மாணவர்கள் ஐஐடிகளில், 27 மாணவர்கள் என்ஐடிகளில், 10 மாணவர்கள் ஐஐஐடிகளில் , 2 மாணவர்கள் பீஜஎஸ்டிஇல், 1 மாணவர் ஐஐஎஸ்டிஇல், 3 மாணவர்கள் ஐஐஎஸ்இஆர்களில், 10 மாணவர்கள் விஜடிஇல் சேர்க்கை பெற்றனர். மேலும், 90 மாணவர்கள் அரசு மருத்துவக் கல்லூரியிலும் 170 மாணவர்கள் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கை பெற்றுள்ளனர்.ஈரோடு, கரூர், சேலம், நாமக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த மதிப்புமிக்க கல்விப் பள்ளிகள் மற்றும் மாணவர்களுக்கு ஆலன் கோயம்புத்தூர் ஒரு சிறந்த வழிகாட்டுதல் தளத்தை வழங்குகிறது.

இந்த நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக இந்திய வருவாய் சேவையைச் சேர்ந்த (ஐஆர்எஸ்) வருமான வரி ஆணையர் டாக்டர் ஏ. ஸ்ரீநிவாசன் கலந்து கொண்டு பேசுகையில், "நமது மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள், தேசிய அளவில் புகழ்பெற்ற பொறியியல் மற்றும் மருத்துவ நுழைவுத் தேர்வுகளில் தகுதி பெற்று வெற்றி பெறுவதை காண்பது எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியை அளிக்கிறது. மாணவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள் மற்றும் அவர்களை தொடர்ந்து ஆதரித்த பெற்றோருக்கு என் வணக்கம். மாணவர்களுக்கு இத்தகைய நம்பகமான மேடையை வழங்கிய ஆலன் கோயம்புத்தூரை மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். கோயம்புத்தூரிலிருந்து இன்னும் பல வெற்றிக் கதைகள் உருவாக வேண்டும் என்பதே எனது விருப்பம்," என தெரிவித்தார்.

ஆலன் தெற்கு மையங்களின் துணைத் தலைவர் மற்றும் வேதியியல் துறை ஆசிரியரான மகேஷ் யாதவ் பேசுகையில், "கோயம்புத்தூரில் எளிமையாக தொடங்கிய ஆலன் இன்று மிகப் பெரிய வளர்ச்சியை நோக்கி பயணிக்கிறது. வரவிருக்கும் ஆண்டுகள், போட்டித் தேர்வுகளின் துறையில் ஆலன் கோயம்புத்தூரை தேசிய மற்றும் சர்வதேச அளவில் உயர்த்தி நிறுத்தும் என்பது உறுதி. கோயம்புத்தூரின் மாணவர்களின் திறமை மீதும், ஆலன் குழுவின் மீதும் எனக்கு முழுமையான நம்பிக்கை உள்ளது." என்றார்.

ஆலன் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மையங்களின் கல்வி தலைவர் மற்றும் கணித துறை ஆசிரியரான . சந்தோஷ் சிங் பேசுகையில், "ஒலிம்பியாட்கள், ஐஐடிமற்றும் நீட் நுழைவு தேர்வுக்காக தமிழ்நாட்டின் திறமைகளுக்கு வழிகாட்டும் எனது அனுபவத்தை, மாணவர்களின் அர்ப்பணிப்பும் வெற்றியும் உறுதிப்படுத்தியுள்ளன; என்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் மாணவர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைத்தாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.3000 வழங்கப்பட்டு வருகிறது.




■ இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் அரசு நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாணவ, மாணவிகள் வாசிப்பு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.எல்.ரெஜினி அவர்கள் உள்ளார்.

## கீழக்கோட்டையில் தேசிய இளைஞர் தின கொண்டாட்டம்

காளையார் கோவில், ஜன.13-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சுற்றுச்சூழல் மன்றம் சார்பாக மகிழ் முற்ற மாணவ மாணவிகள் தேசிய இளைஞர் தினம் மற்றும் அயலகத் தமிழர் தினத்தை கொண்டாடினர். பள்ளியின் தலைமை ஆசிரியை தெய்வானை தலைமை வகித்து மாறி வரும் உலகில் இளைஞரின் பங்கு பற்றி சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி முன்னிலை வகித்தார். பட்டதாரி ஆசிரியர் கீதா வரவேற்றார். சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளான ஜனவரி 12 ஆம் தேதியை இந்திய அரசு 1984 ஆம் ஆண்டு தேசிய இளைஞர் தினமாக அறிவித்து 1985ஆம் ஆண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி ஒரு நாட்டின் எதிர்காலமே இளைஞர்கள் கையில் தான் உள்ளது. இளைஞர்களின் வளர்ச்சிக்கு ஏற்பதான் நாட்டின் வளர்ச்சியும் அமைகிறது என்ற சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளான ஜனவரி 12ஆம் தேதியை தேசிய இளைஞர் தினமாக கொண்டாடி வருகிறோம். ஒரு இளைஞன் தேசப்பற்று வீரம் ஒழுக்கம் மனிதநேய பண்புகள் தளர்ந்து போகாத நெஞ்சம் உத்வேகம் பெரியோர்கள் மீது அன்பு மற்றும் மரியாதை போன்றவற்றை கொண்டிருந்தால் அந்த நாடும் முன்னேறும் என்ற சுவாமி விவேகானந்தரின் வார்த்தைகளை உண்மையாக்க பாடுபடுவோம் என அவர் பிறந்த நாளில் உறுதிமொழி எடுப்போம் என்று அனைவரையும் கேட்டுக்கொண்டார். கணித பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். கணினி பயிற்றுநர் வித்யா சத்துணவு உதவியாளர் அஞ்சலை சத்துணவு உதவி உதவியாளர் கஸ்தூரி காலை சிற்றுண்டி பொறுப்பாளர் பஞ்சவர்ணம் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## சென்னை மணலியில் உள்ள விஜயபாரதி நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியில் 6 மணி நேரம் தொடர்ச்சியாக Story Reading Marathon-™ 200 மாணவர்கள் கலந்து கொண்டு கதைகளை வாசித்தனர்.

சென்னை, ஜன.13-

சென்னை மணலியில் உள்ள வித்யபாரதி நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியில் தொடர்ச்சியாக ஆறு மணி நேரம் இடை விடாது மாணவர்கள் Story Reading Marathon நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளி தாளாளர் எஸ். பத்மநாபன் தலைமை தாங்கினார். அகாடமிக் அட்வைஸ்டர் கீர்த்தனா மற்றும் தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கதைகள் வாசிப்பது மூலம் கற்பனைத்திறன், மொழித்திறன் ஆகியவற்றை மாணவர்களிடம் வளர்க்கும் விதமாகவும், மேலும் மாணவர்களிடம் புதிய சிந்தனைகளை உருவாக்கவும், வாசிப்புப் பழக்கம், மேடையில் பயமின்றி பேசும் திறனை வளர்த்துக்கொள்ளும் வகையில் நடைபெற்றது.




இதில் எல்.கே.ஜி முதல் ஐந்தாம் வகுப்பு வரை சுமார் 200 மாணவ, மாணவியர்கள் தங்களது கதைகளை படிக்க தொடங்கினர்.

காலை 9 மணிக்கு தொடங்கப்பட்ட இந்த நிகழ்ச்சியில் ஒவ்வொரு மாணவர்களும் ஒன்று முதல் மூன்று வரையிலான கதைகளை வாசித்தனர். பிற்பகல் 3 மணி வரை தொடர்ந்து 6 மணி நேரத்தில் மொத்தம் 400க்கும் மேற்பட்ட கதைகளை மாணவர்கள் படித்தனர்.

பள்ளியில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களையும் மேடை ஏற்றி, பயமின்றி தைரியமாக பேசவேண்டும் என்பதே பள்ளியின் முக்கிய நோக்கமாகவும், அதன்படி அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது அனைவரையும் ஆச்சிரியபடவைத்துள்ளது.

நிகழ்ச்சி தொடர்பாக அகாடமிக் அட்வைஸ்டர் கீர்த்தனா கூறும்போது;

"ஒவ்வொரு குழந்தையும் தயக்கமின்றி மேடையேற வேண்டும், அவர்களுக்குச் சமமான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்" என்பது இப்பள்ளியின் நிறுவனர் மறைந்த திருமதி. எழிலரசி பத்மநாபன் அவர்களின் மிக முக்கியமான விருப்பமாகும். அவரின் அந்த உயரிய நோக்கத்தின்படி, இந்த நிகழ்ச்சியில் அனைத்து மாணவர்களுக்கும் மேடை ஏறித் தங்கள் திறமையை வெளிப்படுத்தச் சம வாய்ப்பு வழங்கப்பட்டது. எவ்விதத் தயக்கமுமின்றி மேடையை அதிரவைத்த மாணவர்களின் உற்சாகம், அங்கு கூடியிருந்த அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. நிறுவனரின் ஆசியுடன், ஒவ்வொரு குழந்தையும் அனைத்துத் திறன்களையும் பெற்று சிறக்க வேண்டும் என்பதே இந்த முயற்சியின் பின்னணியாகும் என தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் வித்யபாரதி பள்ளி முதல்வர் உஷா ராணி ஆசிரியர்கள், பெற்றோர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மாலை தந்தி

செவ்வாய்கிழமை 13.1.2026

# தமிழ்நாடு முதலமைச்சர் கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக முதல் கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் ”உலகம் உங்கள் கையில்” திட்டத்தில் பயனடைந்த மாணவி நன்றியை தெரிவித்தார்





தமிழ்நாடு முதலமைச்சர் கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக முதல் கட்டமாக 10 இலட்சம் மடிக்கணினிகள் வழங்கும் ”உலகம் உங்கள் கையில்” திட்டத்தை (05.01.2026) அன்று தொடங்கி வைத்தார்கள்.

அரசு கல்லூரி மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல், பொறியியல், வேளாண்மை மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் இளங்கலை இறுதி ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கிட அரசாணை (நிலை) எண்.74 (அரிதுறை நாள். 22.04.2025 ஆணையிடப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் 43 அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் 18154 மாணவ, மாணவியர்கள் Online portal ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்திற்கு முதற்கட்டமாக 5648 மடிக்கணினிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் pre final year மாணவ மாணவிகளின் விவரங்களை online portalல் உரிய பதிவுகள் மேற்கொள்ளவும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கைகளை உறுதி செய்திடும் பணிகளை தொடர்பு அலுவலர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். இவர்களுக்கு இரண்டாம் கட்டமாக ஜனவரி மாதம் 3ம் வாரத்தில் மடிக்கணினி வழங்கப்பட உள்ளது. தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு தேர்வு செய்யப்படுபவர்களுக்கு மட்டும் மடிக்கணினி வழங்கப்பட உள்ளது. பிப்ரவரி 20 ஆம் தேதிக்குள் அனைத்து பயனாளிகளுக்கும் இலவச மடிக்கணினி வழங்கப்பட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மாணவி செல்வி ஹரிப்பிரியா தெரிவிக்கையில்,

என்னுடைய பெயர் ஹரிப்பிரியா நான் மீனாட்சி கல்லூரியில் பி.சி.ஏ மூன்றாம் ஆண்டு படித்து வருகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் லேப்டாப் கொடுத்துள்ளார்கள். இந்த லேப்டாப்பால் எங்களுக்கு அதிகமான பயன்கள் தரும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ”நான் முதல்வன்” திட்டத்தை கொண்டு வந்தார்கள். நான் முதல்வன் திட்டத்தில் அதிகமாக ஆன்லைன் கிளாசஸ் மற்றும் ப்ராஜெக்ட் செய்ய வேண்டி இருந்தது. லேப்டாப் இல்லாத காரணத்தால் எங்களால் ப்ராஜெக்ட் எதுவும் சரியாக பண்ண முடியாமல் மற்றவர்களை சார்ந்திருக்க வேண்டிய நிலை இருந்தது. இரண்டு மூன்று பேர் சேர்ந்து ஒரே லேப்டாப்பில் ப்ராஜெக்ட் பண்ண வேண்டிய சூழல் இருந்தது. அதனால் எங்களுக்கு பிராக்டிகல் (Practical Experience) எக்ஸ்பீரியன்ஸ் கிடைக்கவில்லை. இப்பொழுது எங்களுக்கு லேப்டாப் கிடைத்துள்ளதால் எங்களால் வீட்டில் இருந்து லேப்டாப்பில் ப்ராஜெக்ட் எளிதாக செய்ய முடிகிறது மற்றும் ஆன்லைன் கிளாசஸ் கவனிக்க முடிகிறது. (Presentation) பிரசன்டேஷன்ஸ் அதிகமாக செய்ய முடிகிறது.

வெளி காலேஜ்க்கு காம்படிஷன் போனால் லேப்டாப் கடன் வாங்க வேண்டிய நிலை இருந்தது. அதனால் அதிகமாக காம்படிஷன் போக தயங்கினோம். இப்பொழுது லேப்டாப் இ ருப்பதால் அனைத்திலும் கலந்து கொள்ள உதவியாக இருக்கும். நாங்கள் அதிகமாக காம்படிசனின் கலந்துகொண்டு எங்கள் கெரியரை (Career) வளர்ச்சி அடைய வைக்க முடியும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய லேப்டாப் எங்களது கெரியரை டெவலப் பண்ண மிகவும் உதவியாக உள்ளது. எனது குடும்ப சூழ்நிலை காரணமாக லேப்டாப் வாங்க இயலவில்லை. எனது குடும்பத்தில் ஒருவரால் எங்களை போன்ற ஏழை, எளிய மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கி அறிவியலும், தொழில் நுட்பமும் வளர்த்து வரும் இந்த போட்டி நிறைந்த உலகத்தில் எங்கள் திறனை மேலும் வளர்த்துக் கொள்ள மடிக்கணினி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கயுள்ளார்கள். இந்த மடிக்கணினியை பொழுதுபோக்காக பயன்படுத்தாமல் எங்கள் கல்வியை மற்றும் திறனை மேம்படுத்தி சாதனை படைக்க உள்ளோம். எனவே இத்தகைய லேப்டாப் வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

வெளியீடு:
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,,**
மதுரை மாவட்டம்



## மாமதுரையர் சார்பில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாட்டம்

மதுரை, ஜன.13-

மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் மாமதுரையர் அமைப்பின் நிறுவனர் ஜே.கே. முத்து, தலைவர் திருமுருகன், செயலாளர் சம்பத்குமார், பொருளாளர் சுப்பிரமணியன் ஆகியோர் தலைமையிலும், இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திரைப்பட இயக்குனர், நடிகர் சேரன் முன்னிலையில் சமத்துவ பொங்கல் கொண்டாடினர், இவ்விழாவில் தென் மாவட்டங்களைச் சேர்ந்த மாமதுரையர் உறுப்பினர்கள் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு 2026ம் ஆண் டிற்கான பொங்கல் பண்டிகை போற்றும் விதமாக 26 வகையான பொங்கல் வைத்தும், 26 வகையான கோலங்கள் ஈட்டும் சமத்துவ பொங்கலை சிறப்பாக கொண்டாடினார்கள், இந்நிகழ்வில் மானாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளும், உறியடித்தல் மற்றும் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. மேலும் இவ்விழாவில் சுற்றுலா பயணிகள் வெளிநாட்டினர் பாரம்பரிய பொங்கல் கலை நிகழ்ச்சிகளை கண்டு மகிழ்ந்தனர்.





## மானாமதுரையில் TNCSC சுமை தூக்குவோரின் மாநில பொதுக்குழு கூட்டம்

### பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வேலைநிறுத்தப் போராட்டம் அறிவிப்பு

மானாமதுரை, ஜன.13-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் உள்ள அனுசியா மஹாலில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக (TNCSC) சுமை தூக்குவோரின் மாநில பாதுகாப்புச் சங்கத்தின் 38வது மாநில பொதுக்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது.

தலைமை மற்றும் பங்கேற்பாளர்கள் இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் M.வீரராகவன் (உயர் நீதிமன்ற வழக்கறிஞர்) தலைமை தாங்கினார். மாநில பொதுச்செயலாளர் C. சந்திரன், மாநிலத் துணைத் தலைவர் D.தனபாலன், மாநில அமைப்புச் செயலாளர் A.ஆறுமுகம், மாநிலத் துணைச் செயலாளர் D. தட்சிணாமூர்த்தி, மாநிலத் துணைத் தலைவர் A.சூர்யசந்திரன், மற்றும் மாநில பொருளாளர் K. அனந்தகோன் உள்ளிட்ட மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

முக்கிய கோரிக்கைகள்

இப்பொதுக்குழுவில் சுமை தூக்கும் தொழிலாளர்களின் நலன் சார்ந்து பின்வரும் முக்கிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன:

* சங்க அங்கீகாரத் தேர்தல்: உயர்நீதிமன்ற உத்தரவு இருந்தும் கடந்த 6 ஆண்டுகளாக நடத்தப்படாமல் உள்ள சங்க அங்கீகாரத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்.
* பெயர் சேர்த்தல்: வருகைப் பதிவேட்டில் பெயர் சேர்க்கப்படாமல் 7 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வரும் சுமை தூக்கும் தொழிலாளர்களின் பெயர்களை உடனடியாகப் பதிவேட்டில் இணைக்க வேண்டும்.
* பச்சை அட்டை வழங்குதல்: TNCSC விதிகளின்படி 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்குப் பச்சை அட்டை வழங்கப்பட வேண்டும். குறிப்பாக, 2022ல் பணி முடித்தும் அட்டை வழங்கப்படாதவர்களுக்கு 2022ஐ முன்தேதியிட்டு உடனடியாக வழங்க வேண்டும்.

போராட்ட அறிவிப்பு

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 21-01-2026 முதல் மாநிலம் தழுவிய அளவில் வேலைநிறுத்தம், உள்ளிருப்புப் போராட்டம், சிறை நிரப்பும் போராட்டம் மற்றும் தொடர் வேலைநிறுத்தப் போராட்டம் எனப் பல்வேறு கட்டப் போராட்டங்களை நடத்தப் போவதாகப் பொதுக் குழுவில் ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## காரைக்குடியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் அறிமுகக் கூட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது





காரைக்குடி, ஜன.13-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட மாவட்டச் செயலாளர்கள், மாநில, மண்டல நிர்வாகிகள் மற்றும் துணைச் செயலாளர்களின் அறிமுகக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

தலைமை மற்றும் முன்னிலை

இந்நிகழ்விற்கு காரைக்குடி சட்டமன்றத் தொகுதி மாவட்டச் செயலாளர் க. தேன்மொழி தலைமை தாங்கினார். மாநிலக் கருத்தியல் பரப்புச் செயலாளர் அ. செல்லப்பாண்டியன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இக்கூட்டத்தில் முக்கிய முன்னிலையாளர்களாக:

* வழ. வே. பாலையா (மானாமதுரை சட்டமன்றத் தொகுதி மாவட்டச் செயலாளர்)
* வழ. பா. வெற்றி விஜயன் (சிவகங்கை சட்டமன்றத் தொகுதி மாவட்டச் செயலாளர்)
* வழ. ராமச்சந்திரன் (திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி மாவட்டச் செயலாளர்)
* அம்பேத்வளவன் (ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி மாவட்டச் செயலாளர்)
* திலிபன்ராசா (திருமயம் சட்டமன்றத் தொகுதி மாவட்டச் செயலாளர்)

ஆகியோர் கலந்துகொண்டனர்.

முக்கிய நிர்வாகிகள் பங்கேற்பு

சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதி மண்டலச் செயலாளர் செ. பெரியசாமி, மண்டலத் துணைச் செயலாளர்கள் அ. முத்துராசு, சங்கு உதயக்குமார், சின்னுப்பழகு ஆகியோர் முன்னிலையில் அறிமுக நிகழ்வுகள் நடைபெற்றன.

மேலும், வழக்கறிஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் அய்யனார், திருப்புவனம் ஒன்றியச் செயலாளர் சோ. கண்ணன், மானாமதுரை ஒன்றியச் செயலாளர் பெ. கிருஷ்ணமூர்த்தி, காளையார்கோவில் தம்பி அஜித்வளவன் மற்றும் சிவகங்கை மாவட்ட தெற்கு செய்தித்தொடர்பாளர் மூ. அர்ஜுன் (எ) ஆதிவளவன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

நிறைவுரை

இந்த அறிமுகக் கூட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய மற்றும் நகர முகாம் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். கட்சியின் எதிர்காலச் செயல்பாடுகள் மற்றும் தொகுதி வளர்ச்சிப் பணிகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

## பாகனேரி திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர் பி டி ஆர். முத்து பிறந்தநாள் விழா: நலத்திட்ட உதவிகள் வழங்கி திமுகவினர் வாழ்த்து



காளையார் கோவில், ஜன.13-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் வடக்கு ஒன்றியம் பாகை வாள்கோட்டை நாடு பாகனேரியில் திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினரும் , சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் , மொழிப்போர் களபதி பாகை பி. திருஞானசம்பந்தம் அவர்களின் மகனுமான பி. டி. ஆர். முத்து 62 வது பிறந்தநாள் விழாவையொட்டி கேக் வெட்டி, 1000 பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் கொண்டாடப்பட்டது...

பாகனேரி பி. டி. ஆர். முத்து சிவகங்கை மாவட்ட திமுக தொண்டரணி அமைப்பாளர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளையும் தற்போது தொடர்ந்து 18 ஆண்டுகளாக திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகவும் கழகப் பணிகளாற்றி வருபவர்...

மேலும் இவரது தந்தை பி. திருஞானசம்பந்தம் அப்போதைய ஒருங்கிணைந்த முகவை ஜில்லாவில் வட்டக்கழக செயலாளராகப் பணியாற்றியும் , இந்தி மொழி திணிப்பிற் கெதிரான மொழிப் போரில் பங்கெ டுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது...

மேலும் திருஞானசம்பந்தம் , பேரறிஞர் அண்ணா , தானைத்தலைவர் கலைஞர் , அப்போதைய கழக அமைப்புச் செயலாளர், சேதுநாட்டு செல்லக்கிளி , எஸ். எஸ். தென்னரசு , முன்னாள் அமைச்சர் தங்கபாண்டியன் , உள்ளிட்ட கழக முனனோடிகளுடனான நட்பை பாராட்டி வந்தவராவார்...

இப்படி அரசியல் பாரம்பரிய பின்புலத்தை கொண்ட பாகனேரி பி. டி. ஆர். முத்து 62 வது பிறந்தநாள் விழாவில், அவரது குடும்பத்தினர் ஏற்பாடு செய்திருந்த 62 கிலோ கேக் வெட்டி தனது பிறந்தநாள் விழாவினைக் கொண்டாடினார்

இந்த நிகழ்ச்சியில் 1000க்கும் மேற்பட்ட பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை அசைவ உணவும் பரிமாறப்பட்டது...

இதனிடையே பேசிய திமுக மற்றும் சமுதாய பெரியவர்கள் பாகனேரி பி.டி. ஆர் முத்து நூறாண்டு காலம் வாழ்வாங்கு வாழ்ந்து கழகப் பணியாற்றிட வேண்டும் எனவும் பேசினர்...

இறுதியாக ஏற்புரையாற்றிய பாகனேரி முத்து அவர்கள், இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் மீண்டும் ஆட்சிக்கட்டிலில் அமர்த்துவதற்கு நீங்கள் எல்லோரும் எப்போதும் போலவே வருகிற சட்டமன்ற தேர்தலிலும் உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு தெரிவித்திட வேண்டும் எனவும் , கலந்து கொண்டு வாழ்த்திய அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதாகவும் பேசினார்..

இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை நகர செயலாளர், நகர்மன்றத் தலைவர் சி. எம். துரை ஆனந்த், ஒன்றிய திமுக செயலாளர்களான சிவகங்கை வடக்கு திருமலை ஆ. முத்துராமலிங்கம், தெற்கு டாக்டர் ம.ஜெயராமன், மேற்கு கண்டாங்கிபட்டி பெ. மந்தக்காளை, நாட்டரசன்கோட்டை பேரூர்க்கழக செயலாளர் ஜெயராமன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் , காளையார்கோவில் வடக்கு ஒன்றிய அவைத்தலைவர் துருவம்பட்டி சுப. தமிழரசன், வடக்கு ஒன்றிய பொருளாளர் கீழக்கோட்டை கண்ணன், மாவட்ட பிரதிநிதிகளான வழக்கறிஞர் அல்லூர் உமாசங்கர், ஏடிஎன்ஆர். தங்கமணி, ஒன்றிய மேனாள் கவுன்சிலர், மாவட்ட பிரதிநிதி மேப்பல் அழகப்பன், அல்லூர் நீர்ப்பாசன சங்கத்தலைவர், கழக மூத்த முன்னோடி அல்லூர் ரவிச்சந்திரன், காங்கிரஸ் துருவம்பட்டி தனுஷ்கோடி, சிவகங்கை நகர் சுற்றுச்சூழல் அணி முன்னாள் கவுன்சிலர் சுப. ஜெயக்குமார், திருப்புத்தூர் ரமேஷ், பாகனேரி கிளைக்கழகச் செயலாளர் சணமுகம் , எஸ். ஆறுமுகம், வீழனேரி விஜயன், இளைஞரணி சந்துரு, பழனியப்பன் , செல்வகண்ணப்பன், ஜெய்கணேஷ், சங்கர், திருநா ,சின்னத்திருஞானம் பி பாலு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்...

இந்த நிகழ்ச்சியில் பிடிஆர். முத்து மகள் கயல்விழி குடும்பத்தினர் பிறந்தநாள் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்..

# ஊழல் அரசு ஊழியர்களுக்குச் செக்: 120 நாட்களில் அனுமதி தராவிட்டால் 'தானாகவே' வழக்கு பாயும் மத்திய அரசின் அதிரடி சட்டத்திருத்தம்

புதுடெல்லி, ஜன.13-

அரசு ஊழியர்கள் லஞ்ச வழக்குகளில் சிக்கினால், அவர்கள் மீது வழக்குத் தொடர அனுமதி அளிப்பதில் நிலவி வந்த காலதாமதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் மத்திய அரசு புதிய சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது. இனி 120 நாட்களுக்குள் அரசு முடிவெடுக்காவிட்டால், அனுமதி கிடைத்ததாகவே கருதப்பட்டு நீதிமன்ற விசாரணை தொடங்கும்.

தற்போதைய நடைமுறை மற்றும் சிக்கல்கள்

பொதுவாக, ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒரு அரசு ஊழியர் மீது வழக்குத் தொடர (பிரிவு 19ன் படி) அரசிடம் முன் அனுமதி பெற வேண்டும். லஞ்சம் வாங்கும் போது கையும் களவுமாகப் பிடிக்கப்படுபவர்களை உடனடியாகக் கைது செய்ய முடியும் என்றாலும், நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை (Charge Sheet) தாக்கல் செய்ய அரசின் அனுமதி கட்டாயமாகும். இந்த அனுமதி வழங்கும் கோப்புகளை அரசு மாதக்கணக்கில் கிடப்பில் போடுவதால், லஞ்ச ஊழல் பேர்வழிகள் தண்டனையிலிருந்து தப்பிப்பதோடு, மீண்டும் பணியில் சேரும் சூழலும் நிலவி வந்தது.

புதிய சட்டத்திருத்தம் கூறுவது என்ன?

மத்திய அரசின் புதிய பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (BNSS) சட்டத்தின்படி, இந்த நடைமுறையில் அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன:

* 120 நாட்கள் காலக்கெடு: அரசு ஊழியர் மீது வழக்குத் தொடர அனுமதி கோரும் விண்ணப்பத்தின் மீது அரசு 4 மாதங்களுக்குள் (120 நாட்கள்) முடிவெடுக்க வேண்டும்.

* தானாகவே அனுமதி (Deemed Sanction): குறிப்பிட்ட 120 நாட்களுக்குள் அரசு அனுமதி வழங்கவோ அல்லது மறுக்கவோ இல்லை என்றால், அந்த அனுமதி வழங்கப்பட்டதாகவே சட்டம் கருதும்.

* நீதிமன்ற விசாரணை: 120 நாட்கள் கடந்தவுடன், லஞ்ச ஒழிப்பு போலீசார் நேரடியாகக் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யலாம். நீதிமன்றமும் தானாகவே வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்.

அரசு மறுத்தால் சட்டப் போராட்டம்

போதிய ஆதாரங்கள் இருந்தும் அரசு அனுமதி அளிக்க மறுத்தால், அதை எதிர்த்துப் பாதிக்கப் பட்டவர்கள் அல்லது லஞ்ச ஒழிப்புத் துறை நீதிமன்றத்தை அணுகலாம். அரசின் மறுப்பு ஆணை தர்க்கத்திற்குப் புறம்பாக இருந்தால், உயர் நீதிமன்றமோ அல்லது உச்ச நீதிமன்றமோ அந்த ஆணையை ரத்து செய்யும் அதிகாரம் பெற்றுள்ளது.

உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்கள்

ஏற்கனவே சுப்ரமணிய சுவாமி ஷ்ஷிட மன்மோகன் சிங் மற்றும் வினீத் நாராயண் போன்ற முக்கிய வழக்குகளில், ஊழல் வழக்குகளுக்கான அனுமதி வழங்கக் காலக்கெடு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும், தாமதம் செய்வது நீதியை மறுப்பதற்குச் சமம் என்றும் உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருந்தது. அதனை உறுதிப்படுத்தும் வகையில் இந்த புதிய சட்டம் அமைந்துள்ளது.

தப்பிக்க முடியாது

லஞ்சம் வாங்கும் போது ரசாயனப் பொடி தடவிய ரூபாய் நோட்டுகள் போன்ற அறிவியல் பூர்வமான ஆதாரங்களுடன் பிடிபடும் அதிகாரிகளுக்கு எதிராக இனி அரசு சலுகை காட்ட முடியாது. வலுவான ஆதாரங்கள் இருக்கும் நிலையில், இந்த 120 நாள் கெடு ஊழல் அதிகாரிகளுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பது உறுதியாகிறது.






# 37 வது சாலைப்பாதுகாப்பு மாதத்தினை முன்னிட்டு வாகனவோட்டிகளுக்கு துண்டு பிரச்சாரம்

மதுரை, ஜன.13-

மதுரை காளவாசல் பகுதியில் திலகர் திடல் போக்கு வரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி தலைமையில் அண்ணா பல்கலைகழக மாணவர்கள், பேராசிரியர்கள் இணைந்து பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் துண்டு பிரசுரம் வழங்கியும், போக்குவரத்து விழிப்புணர்வு பாதாகைகளுடன் சாலைப்பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.. இதில் அண்ணா பல்கலை கழக பேராசிரியர் முத்துவேலாயுதம் மற்றும் சார்பு ஆய்வாளர் சந்தனகுமார் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

# பீர்க்கன்காரணை பகுதியில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் 109வது பிறந்த நாளையொட்டி மாவட்ட மருத்துவ அணி சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்





தாம்பரம், ஜன.13-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பீர்க்கன்காரணை பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆரின் 109வது பிறந்த நாளையொட்டி மாவட்ட மருத்துவ அணி சார்பில் மாவட்ட மருத்துவ அணி செயலாளர் டாக்டர் ஆர்.பாலாஜி ஸ்ரீகாந்த் ஏற்பாட்டில் நடைபெற்ற மருத்துவ முகாமை செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் அனைத்துலக எம்ஜிஆர் மன்ற தலைவர் முன்னாள் அமைச்சர் டி.கே.எம். சின்னையா கலந்து கொண்டார். பீர்க்கன்காரணை பகுதி கழகச் செயலாளர் எஸ்.வளையாபதி, மாவட்ட அம்மா பேரவை தலைவர் எ.வி.சம்பத்குமார், தாம்பரம் மத்திய பகுதி கழகச் செயலாளர் எல்லார் செழியன், தாம்பரம் மேற்கு பகுதி கழகச் செயலாளர் ஏ.கோபிநாதன், காஞ்சிபுரம் மண்டல அண்ணா தொழிற்சங்க செயலாளர் ஆர்.வேணுகோபால், மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் பி.ஆர்.எஸ்.சரவணராஜ், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் தா.முகுந்தன், பகுதி அவைத்தலைவர் ஜி.ஹரிபாபு, வட்டக் கழக செயலாளர்கள் முன்னாள் கவுன்சிலர் கேபிள் வி.குணா, எஸ்.ஆர். நாகராஜன், ஆர்.ஜெகதீசன், ஆர்.பிரபாகரன், மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி எல்லாரும் இணைச் செயலாளர் டி ஸ்ரீபாஸ்கர், மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் ஜெ.ஜெனிபர், தாம்பரம் சட்டமன்றத் தொகுதி வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளர் லலித் ஆர்.நிவேதித்தன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைச் செயலாளர் ஆர். ரவிச்சந்திரன், பகுதி தகவல் தொழில்நுட்ப பிரிவு பீ. விஜயராஜ் உட்பட மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.




# கண்டிகை அரசு மேல்நிலை பள்ளியில் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி

## சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், ஒன்றிய குழு தலைவர் உதயா கருணாகரன் பங்கேற்பு

செங்கல்பட்டு, ஜன.13-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் வண்டலூர் அடுத்த நல்லம்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட கண்டிகை அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இதில் பள்ளியின் தலைமை ஆசிரியர் அனைவரையும் வரவேற்றனர். நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர் லட்சுமணன், துணைத் தலைவர் ஹேமமாலினி வாசு, ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்கொளத்தூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் உதயா கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டு 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கவுன்சிலர், வார்டு கவுன்சிலர்கள், வார்டு கழக செயலாளர்கள், மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.



# பரமக்குடியில் ரூ.3 கோடியில் தியாகி இமானுவேல் சேகரன் மணிமண்டபம்: 17ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்

பரமக்குடி, ஜன.13-

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரன் நினைவாகத் தமிழக அரசு சார்பில் கட்டப்பட்டுள்ள மணிமண்டபத்தை, வரும் 17ம் தேதி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் திறந்து வைக்கிறார்.

திட்ட விவரங்கள்

* மதிப்பீடு: இந்த மணிமண்டபம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.


* அமைப்பு: பரமக்குடி சந்தைக்கடை திடலில் தியாகி இமானுவேல் சேகரன் சிலையுடன் கூடிய பிரம்மாண்ட மணிமண்டபமாக இது அமைக்கப்பட்டுள்ளது.

* தற்போதைய நிலை: மணிமண்டபத்தின் அனைத்துப் பணிகளும் முழுமையாக முடிவடைந்து, தற்போது திறப்பு விழாவிற்குத் தயார் நிலையில் உள்ளது.

திறப்பு விழா நிகழ்வு

வருகிற 17ம் தேதி நடைபெறும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மணிமண்டபத்தை நேரில் திறந்து வைக்கிறார். இந்நிகழ்வில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் (எம்.பி), சட்டமன்ற உறுப்பினர்கள் (எம்.எல்.ஏ) மற்றும் அரசு உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொள்கின்றனர்.

ஏற்பாடுகள் விழாவிற்கான விரிவான ஏற்பாடுகளைத் தமிழக அமைச்சர் ராஜகண்ணப்பன், ராமநாதபுரம் மாவட்ட திமுக செயலாளரும் எம்.எல்.ஏவுமான காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், பரமக்குடி எம்.எல்.ஏ முருகேசன் உள்ளிட்டோர் முன்னின்று கவனித்து வருகின்றனர்..





■ சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகே உள்ள சிப்காட்டில், மானாமதுரை போக்குவரத்து காவல்துறை சார்பில் 2026 ம் ஆண்டிற்கான சமத்துவ பொங்கல் உற்சாகமாக கொண்டாடப்பட்டது. நிகழ்வில் காவல்துறையினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு பொங்கல் வைத்து சமத்துவம், ஒற்றுமை என்ற செய்தியை எடுத்துரைத்தனர். சமத்துவம், சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் நிகழ்ச்சி நடைபெற்றது.




■ மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.50 சிம்மக்கல் ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடங்களை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் திறந்து வைத்து பார்வையிட்டார் அருகில் ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., , கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன் , துணை ஆணையாளர் ஜெய்னுலாபுதீன், கல்வி அலுவலர் மோகன் , மாமன்ற உறுப்பினர் இந்திராகாந்தி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# கூடலூரில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பறிமுதல் - விற்பனையாளர் கைது

கூடலூர், ஜன.13-

தேனி மாவட்டம் கூடலூரில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை பதுக்கி வைத்து விற்பனை செய்த நபரை போலீசார் கைது செய்தனர். அவரிடமிருந்து ரூ.40,000 மதிப்புள்ள, சுமார் 60 கிலோ எடையுள்ள புகையிலைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.



கூடலூர் வடக்கு காவல் நிலைய உதவி ஆய்வாளர் கோதண்டராமன் தலைமையிலான போலீசார், கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் கள்ளர் கிழக்கு புதுத்தெருவில் இடிந்து கிடந்த நிலையில் இருந்த ஒரு வீட்டில் திடீர் சோதனை மேற்கொண்டனர். அப்போது அங்கு 3 சாக்கு மூட்டைகளில் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது

விசாரணையில், அந்த புகையிலைப் பொருட்களை பதுக்கி வைத்திருந்தவர் கூடலூர் உசேன் ராவுத்தர் தெருவைச் சேர்ந்த அஜ்மல்கான் மகன் தாரிக் உசேன் (29) என்பதும் தெரிய வந்தது. இதையடுத்து போலீசார் புகையிலைப் பொருட்களை கைப்பற்றி, வழக்குப் பதிவு செய்து தாரிக் உசேனை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியில் பொங்கல் தமிழர் திருநாள் 2026. விழா

பெரியகுளம், ஜன.13-






தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள புனித அன்னாள் பள்ளியில் பொங்கல் வைத்து கரும்பு படைத்து கலை விழா கண் கவரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தலைமை விருந்தினர் சகோ ஜெ. கரோசிலின் நிர்மலா ராணி கலை நிகழ்ச்சியில் அனைத்து மாணவ மாணவிகளும் கலர் கலர் உடைகளில் ஜொலித்தனர். கலை நிகழ்ச்சியில் காண்பதற்கு பள்ளி மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள் உறவினர்கள் நண்பர்கள் வந்திருந்து பொங்கல், ஆடல் பாடல் நடனம் மற்றும் மாணவ மாணவிகளுக்கு களில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன. ஆசிரியர் ஆசிரியைகள் பள்ளி ஊழியர்கள்



# காவேரிப்பட்டினம் திமுக மத்திய ஒன்றியத்தை சேர்ந்த மாற்றுக் கட்சியினர் திமுகவில் மதியழகன் எம்எல்ஏ முன்னிலையில் இணைந்தனர்

கிருஷ்ணகிரி, ஜன.13-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டிணம் மத்திய ஒன்றியம்,பையூர் ஊராட்சியை சேர்ந்த அதிமுக இளைஞர் அணி வெற்றிவேல், சிதம்பரம், அதிமுக BLA-2 பெருமாள் மற்றும் பாரதிய ஜனதா கட்சி தங்கராஜ் ஆகியோர் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன், MLA முன்னிலையில் திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைத்துகொண்டு அவரை வேட்டி சால்வை அணிவித்து வரவேற்றார். நிகழ்ச்சியில் திமுக மத்திய ஒன்றிய செயலாளர் தேங்காய் சுப்ரமணி,மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர்கள் கே வி எஸ் சீனிவாசன், அன்பரசு,ஒன்றிய அவைத் தலைவர் இளங்கோ, மாவட்ட சுற்றுப்புற சூழல் அணி செயலாளர் பாரி, மாவட்ட இலக்கிய அணி கோவிந்தராஜ், முன்னாள் ஊராட்சி குழு துணை தலைவர் சசிகலா தசரா,ஒன்றிய சுற்றுப்புற அணி செயலாளர் அபி கவி கோவிந்தராஜ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் செந்தாமரை தமிழரசு,சக்திவேல்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சண்முகம் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161